சார்பு நீதிமன்றம் மதுராந்தகம்

EP 58/2025 in IA 1/2024 in HMOP 98/2022

பெயர். திரு. ஏழுமலை நாள் 04.03.2026
த/பெ.தனபால்

<u>**எதிர்மனுதாரர் சா.1 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

1) நான் நெற்குணப்பட்டு கிராமத்தில் என் சொந்த வீட்டில் வசித்து வருகிறேன். வழக்கிடை விண்ணப்பம் 1/2024 ல் பகரப்பட்ட உத்தரவுப் பற்றி எனக்கு தெரியும். அந்த உத்தரவை எதிர்த்து மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். அந்த மேல்முறையீட்டு எண் எனக்கு தெரியாது. நான் அவ்வாறு மேல்முறையீடு ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றாலும், பொய்யான தகவலை நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளேன் என்று சொன்னாலும் சரியல்ல. மேல்முறையீட்டிற்கான ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை. எ.ம.சா.ஆ.1 வட்டாட்சியரிடம் வ.வி 1/24 நிலுவையில் வாங்கப்பட்டது என்றால் சரிதான்.

2) எ.ம.சா.ஆ.1 ஆவணம் 30.09.2025 வரை தான் செல்லுபடியாகும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனவே மேற்கண்ட ஆவணம் இவ்வழக்கில் ஏற்கத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல. நான் வைத்துள்ள வெல்டிங் கடை வாடகை எடுத்து வைத்துள்ளேன். அதற்கு மாத வாடகை

ரூ.1000/-. அந்த வாடகை ரசீதை தாக்கல் செய்யவில்லை. வாடகை ஒப்பந்தமும் தாக்கல் செய்யவில்லை, வாய்மொழி ஒப்பந்தம் தான். நான் வைத்துள்ள டின் நம்பர் ஏதும் கிடையாது. அது சிறிய கடை என்பதாலும், கிராமத்தில் உள்ளது என்பதாலும் அந்த எண் தெரியாது. என் கடைக்கான உரிமம் நான் பெறவில்லை. நான் என் வருமானத்தை மறைத்து, வட்டாட்சியரிடம் தவறாத சான்றிதழ் பெற்று பொய்யாக எதிர் கட்சி செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. எ.ம.சா.ஆ.6 மருத்துவ குறிப்புரைகள் என்றால் சரிதான். என் தாயாருக்கு சுமார் 75 வயது இருக்கும்.

3) முதல் விசாரணையில் என் தாயாருக்கு 80 வயது என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். எ.ம.சா.ஆ.6 ல் வயது 60 என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். எ.ம.சா.ஆ.6 போலியானது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கிற்கும், ஆவணத்திற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. வழக்கிடை விண்ணப்பம் 1/2024 ல் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையில் நான் ஒரு சிறிய அளவில் கடை நடத்தி வந்து, அதனை ஆறு மாதத்திற்கு முன்பு மூடி, கூலி வேலை செய்து வருவதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். இம்மனுவில் எதிருரையில் சிறிய வெல்டிங் கடை நடத்தி வருவதாகவும், அதன் மூலம் மாதம் ரூ.6000/- வருமானம் ஈட்டுவதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். எனக்கு போதிய வருமானம் இருந்தும், பொய்யான ஆவணங்கள் தாக்கல் செய்து, மனுதாரருக்கு பராமரிப்பு தொகை பெறக் கூடாது என்று எதிர் கட்சி செய்து

வருகிறேன் என்றால் சரியல்ல. கணவர் என்ற பொறுப்பை செய்யாமல், மகளுக்கு தந்தை என்ற பொறுப்பை செய்யாமல், நிறைவேற்று மனுவை இழுத்தடித்து வருகிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை – இல்லை**